பத்திரிகை வெளியீடு

ஊஅ

# இலங்கையின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான இணைந்த ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வுகள் குறித்த அலுவலர் மட்ட உடன்படிக்கையினைப் பன்னாட்டு நாணய நிதிய அலுவர்கள் எட்டினர்

உடனடி வெளியீட்டிற்கானது

பணிக்குழு விஜயத்தின் பின்னரான பத்திரிகை வெளியீடுகள் நாடொன்றிற்கான விஜயமொன்றினைத் தொடர்ந்து பூர்வாங்கமாகக் கண்டறிந்தவைகளைத் தெரிவிக்கின்ற பன்னாட்டு நாணய நிதியத்தின் அலுவலர் குழுக்களின் அறிக்கைகளினை உள்ளடக்கின்றன. இவ்வறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட கருத்துக்கள் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களின் கருத்துக்களாவதுடன் அவை பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் கருத்துக்களினைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை.

- *பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதியினால் ஆதரவளிக்கப்பட்ட இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் இணைந்த ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வுகளினை நிறைவுசெய்வதற்கான பொருளாதாரக் கொள்கைகள் குறித்த அலுவலர் மட்ட உடன்படிக்கையினை பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் இலங்கை அதிகாரிகளும் எட்டியுள்ளனர். மீளாய்வானது பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்டவுடன் நிதியிடலில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 700 மில்லியன் தொகைக்கான அணுகலினை இலங்கை கொண்டிருக்கும்.*

- *ஒதுக்குச் சேகரிப்பு மற்றும் உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மற்றும் அரசிறைத் திரட்சி என்பன எதிர்பார்க்கைகளிலும் பார்க்க விஞ்சியளவிலான செயலாற்றத்துடன் இலங்கை அதிகாரிகளினால் நடைமுறைப்படுத்தப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மீட்சிக்குத் தொடர்ந்து ஆதரவளித்துள்ளன. இருப்பினும், மத்திய கிழக்கு மோதல்களினால் இலங்கை குறிப்பிடத்தக்களவிலான பாதிப்புக்களிற்கு உள்ளாகியுள்ளதுடன் டித்வா புயலினைத் தொடர்ந்து மீண்டும் சிறப்பான நிலைக்குக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையினைக் கொண்டுள்ளது.*

- *பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கும் மீட்சி மற்றும் அனைவரையுமுள்ளடக்கிய வளர்ச்சியினை நோக்கிய பாதையொன்றில் பொருளாதாரத்தினைப் பேணுவதற்கும் சீர்திருத்தங்களை முன்னேற்றமடையச் செய்வதானது தற்போது மிகவும் முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது. நிச்சயமற்ற சூழலொன்றிற்கு மத்தியில், வெளிப்புற அதிர்வுகளினைச் சிறப்பாக எதிர்கொள்வதற்குப் பொருளாதாரத் தாக்குப்பிடிக்குந்தன்மையினைக் கட்டியெழுப்புவதானது அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது.*

**கொழும்பு, இலங்கை – 2025 ஏப்பிறல் 9:** அண்மைய பேரண்டப்பொருளாதார அபிவிருத்திகள் மற்றும் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் பொருளாதார மற்றும் நிதியியல் கொள்கைகளினை நடைமுறைப்படுத்துவதிலுள்ள முன்னேற்றம் என்பன குறித்துக் கலந்துரையாடுவதற்கு திரு. இவான் பப்பாஜியோர்ஜியு தலைமையிலான பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிக்குழுவொன்று 2026 மாச்சு 26 தொடக்கம் ஏப்பிறல் 9 வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்தது. விஜயத்தினை நிறைவுசெய்து, திரு. பப்பாஜியோர்ஜியு பின்வரும் அறிக்கையினை வெளியிட்டுள்ளார்:

"4 ஆண்டு காலத்திற்கான விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழான இணைந்த ஐந்தாவது மற்றும் ஆறாவது மீளாய்வு குறித்த அலுவலர் மட்ட உடன்படிக்கையினைப் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர்களும் இலங்கை அதிகாரிகளும் எட்டியுள்ளனர். சிஎஉ 2.3 பில்லியன் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3 பில்லியன்) கொண்ட மொத்தத் தொகையொன்றிற்கான ஏற்பாடானது பன்னாட்டு நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையினால் 2023 மாச்சு 20 அன்று ஒப்புதலளிக்கப்பட்டது.

"அலுவலர் மட்ட உடன்படிக்கையானது பன்னாட்டு நாணய நிதிய நிறைவேற்றுச் சபை ஒப்புதலுக்குட்பட்டதாகக் காணப்படுவதுடன், இது (i) மின்சாரம் மற்றும் எரிபொருள் செலவு மீட்சி விலையிடலினை மீள் நிறுத்தும் வேளையில் பாதிக்கப்படக்கூடியவர்களினைப் பாதுகாத்தல் மற்றும் (ii) பல்புடைப் பங்காளர்களின் நிதியிடல் பங்களிப்புக்களினை

உறுதிப்படுத்துவதற்கும் படுகடன் மறுசீரமைப்புடனான போதியளவிலான முன்னேற்றத்தினை மதிப்பிடுவதற்குமான நிதியிடல் உத்தரவாத மீளாய்வின் நிறைவு என்பவற்றில் தங்கியுள்ளது.

“நிறைவேற்றுச் சபை மீளாய்வின் நிறைவினையடுத்து, இலங்கை சிஎஉ 508 மில்லியன் தொகைக்கான (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 700 மில்லியன்) அணுகலினைக் கொண்டிருக்குமென்பதுடன் இது ஏற்பாட்டின் கீழ் பன்னாட்டு நாணய நிதியத்தின் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த நிதியிடல் ஆதரவினை சிஎஉ 1,778 மில்லியனிற்குக் (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 2.4 பில்லியன்) கொண்டுவரும்.

“இலங்கையின் பேராவல்மிக்க சீர்திருத்த நிகழ்ச்சிநிரலானது பாராட்டத்தக்க பெறுபேறுகளைத் தொடர்ந்து விளைவிக்கின்றது. பொருளாதாரமானது 2025இல் ஆண்டிற்காண்டு 5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. பணவீக்கமானது நேர்க்கணிய வீச்சிற்குத் திரும்பலடைந்துள்ளதுடன் மாச்சில் ஆண்டிற்காண்டு 2.2 சதவீதத்திற்கு மீளெழுச்சியடைந்து, மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2026 மாச்சு இறுதியில் ஐ.அ.டொலர் 7 பில்லியன் தொகையினை எட்டின. முதன்மையாக மோட்டார் வாகன இறக்குமதிகள் மீதான வரிகளினால் ஆதரவளிக்கப்பட்டு இறைச் செயலாற்றமானது 2025இல் வலுவாகக் காணப்பட்டது. சிறிலங்கன் ஏயார்லைன்ஸின் படுகடன் பரிமாற்றத்தின் வெற்றிகரமான நிறைவு மற்றும் எஞ்சியுள்ள இருபுடை உடன்படிக்கைகளினை இறுதிப்படுத்துவதிலுள்ள மேலதிக முன்னேற்றம் என்பவற்றுடன் படுகடன் மறுசீரமைப்பானது ஏறத்தாழ நிறைவடைகின்ற மட்டத்தினை எட்டியுள்ளது.

“வலு விலைகளினை உயர்வடையச்செய்து, சுற்றுலாப் பயணிகளிற்கான முக்கிய வான்வழி மையமொன்றினை இடர்நேர்விற்குட்படுத்தி, அத்துடன் பிராந்தியத்தில் பணிபுரிகின்ற இலங்கையர்களினைப் பாதிப்படையச்செய்துள்ள மத்திய கிழக்கு மோதல்கள் காரணமாக இலங்கை குறிப்பிடத்தக்களவிலான பாதிப்புக்களினை எதிர்கொண்டுள்ளது. குடியிருப்பாளர்களிற்கும் தொழிற்றுறைகளிற்கும் போதியளவிலான எரிபொருள் நிரம்பலினை உறுதிப்படுத்துவதன் மூலம் பொருளாதார நடவடிக்கைகளிற்கு ஏற்பட்ட இடையூறுகளினை அதிகாரிகள் சீராக்கியுள்ளனர். அதேவேளை, டித்வா புயலினால் ஏற்பட்ட உட்கட்டமைப்பு மற்றும் செலவிடல் தேவைகளினை நிவர்த்திசெய்ய வேண்டிய தேவையில் நாடு காணப்படுகின்றது. அனர்த்த இடர்நேர்வுகள், தொடர்ச்சியான வர்த்தகக் கொள்கை சார்ந்த நிச்சயமற்றதன்மை மற்றும் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதல்கள் என்பவற்றினால் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள உயர்ந்தளவிலான கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கும், அதிர்வுகளிற்கான இலங்கையின் தாக்குப்பிடிக்குந்தன்மையினை மேம்படுத்துவதற்கும், பொருளாதாரத்தினை மீட்சி மற்றும் அனைவரையுமுள்ளடக்கிய வளர்ச்சியினை நோக்கிய பாதையொன்றில் பேணுவதற்கும் சீர்திருத்த உத்வேகத்தினை விரைவடையச்செய்வதற்கான அவசரத்தன்மையினை வலியுறுத்துகின்றன.

“இவ்விடயத்தில், வலுவான அரசிறை வழிமுறைகள் மற்றும் முன்மதியுடைய செலவிடல்சார் செயற்படுத்துகை என்பன ஊடாக இறை இடைவெளியினைத் தொடர்ந்து கட்டியெழுப்புவதானது முக்கியமானதாகக் காணப்படுகின்றது. வரி இணங்குவிப்பினை மேம்படுத்தல், வரித் தளத்தினை விரிவுபடுத்தல், அரசிறைக் கசிவுகளினை நிவர்த்திசெய்தல் மற்றும் பொது நிதியியல் முகாமைத்துவத்தினை மேம்படுத்தல் ஆகியவற்றிற்கான நிலையான முயற்சிகளினை இது தேவைப்படுத்துகின்றது. மின்சாரம் மற்றும் எரிபொருள் செலவு மீட்சி விலையிடலினை மீட்டெடுத்துப் பேணுகின்ற வேளையில் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களிற்குத் துணைபுரிவதற்கு இவை சாதனமொன்றாகக் காணப்படுகின்றன. இறை இடர்நேர்வுகளினைக் குறைப்பதற்கும் இறை ஒழுக்கவியலினைப் பாதுகாப்பதற்கும் தொடர்ச்சியான விழிப்புணர்வு தேவைப்படுகின்றது.

“இலங்கை மீண்டும் சிறப்பான நிலைக்குக் கட்டியெழுப்புவதற்குத் தொடங்கியுள்ளமையினால், திட்டங்கள் மிகவும் விவேகமிக்க விதத்தில் முன்னுரிமையளிக்கப்பட வேண்டுமென்பதுடன் செலவிடலானது வெளிப்படைத்தன்மையுடனும் பொது நிதியியல் முகாமைத்துவச் சட்டத்துடன் இசைந்து செல்லும் விதத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டும். வெளிப்புற அதிர்வுகளிற்குப் பதிலிறுத்தும் விதத்திலான ஏதேனும் இறை ஆதரவானது நன்கு இலக்கிடப்பட்டதாகவும், கவனமாகச் செலவு மதிப்பிடப்பட்டதாகவும் மற்றும் கால எல்லைக்குட்பட்டதாகவும் அமைதல் வேண்டும். விகிதாசாரத்திற்கு அப்பாற்பட்ட விதத்தில் பாதிக்கப்பட்டுள்ள ஏழ்மையிலுள்ள மற்றும் பாதிப்படையக்கூடியவர்களினைப் பாதுகாப்பதானது முன்னுரிமையொன்றாகத் தொடர்ந்து காணப்பட வேண்டுமென்பதுடன் அவற்றின் இலக்கிடல், போதுமாந்தன்மை, உள்ளடக்கம் மற்றும் அதிர்வுகளிற்குப் பதிலிறுத்துந்தன்மை என்பவற்றினை மேம்படுத்துவதன் மூலம் சமூகப் பாதுகாப்பு வலையமைப்புக்களின் உறுதியான வலுப்படுத்தலினை இது தேவைப்படுத்துகின்றது.

“அதிர்வுகளிற்கு மத்தியில் விலை உறுதிப்பாட்டினைப் பாதுகாப்பதற்கு நாணயக் கொள்கையானது தரவுகளினைச் சார்ந்ததாகவும் விரைவாந்தன்மையுடன் தொழிற்படக்கூடியதாகவும் காணப்படுவது முக்கியமானதொன்றாகும். வரவு செலவுத்திட்டத்திற்கு நாணய நிதியளித்தலினைத் தொடர்ந்து தடைசெய்தல் உள்ளடங்கலாக மத்திய வங்கியின்

சுயாதீனமானது தொடர்ந்து மேம்படுத்தப்பட வேண்டும். உலகளாவிய நிச்சயமற்றதன்மைக்கு மத்தியில், வெளிநாட்டு ஒதுக்குகளினை மீள்கட்டியெழுப்புகின்ற வேளையில் செலாவணி வீத நெகிழ்ச்சித்தன்மையினை அனுமதித்தலானது அவசியமானதொன்றாகக் காணப்படுகின்றது. செயற்படாக் கடன்களிற்கான தீர்வுகளினைக் காணுதல், ஆற்றல்வாய்ந்த கொடுகடன் வளர்ச்சியினை ஊக்குவித்தல் மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளில் உள்ள பாதிப்படையக்கூடியதன்மைகளினை நிவர்த்தி செய்தல் என்பன நிதியியல் உறுதிப்பாட்டினைப் பாதுகாக்கத் துணைபுரியும்.

“ஆளுகைச் சீர்திருத்தங்கள் குறித்த 2026ஆம் ஆண்டிற்கான அரசாங்கத்தின் நடவடிக்கைத் திட்டத்தின் வெளியீடானது வரவேற்கத்தக்கதாகக் காணப்படுகின்றது; இதன் செயற்றிறன்மிக்க நடைமுறைப்படுத்தலானது ஊழல் எதிர்ப்பு நிகழ்ச்சிநிரலினை முன்னெடுப்பதற்கும் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும் துணைபுரியும். இலங்கையின் ஊழல் எதிர்ப்பு அமைப்பின் (இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களினைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு) சுயாதீனத்தினைப் பேணுதல், பயனுகர் சொத்தாண்மைப் பதிவேட்டின் நம்பகத்தன்மைக்கு ஆதரவளித்தல் மற்றும் பொது-தனியார் பங்குடமைகள், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், பொதுப் பெறுகை மற்றும் பொதுச் சொத்து முகாமைத்துவம் என்பன குறித்த ஆற்றல்வாய்ந்த சட்டவாக்கங்களின் மூலம் இறை ஆளுகையினை வலுப்படுத்தல் என்பன முக்கியமானவையாகக் காணப்படும். அனைத்து இலங்கையர்களிற்கும் வலுவான மற்றும் நீடித்த வளர்ச்சியினை வெளிக்கொணர்வதானது வர்த்தகத் தாராளமயமாக்கல் முயற்சிகளினைத் தொடருதல், டிஜிட்டல்மயப்படுத்தல் சார் முயற்சிகளினை விரைவுபடுத்தல், வியாபார ஒழுங்குவிதிகளை நெறிப்படுத்தல் மற்றும் தொழிலாளர் சட்டங்களில் உள்ள இறுக்கமாந்தன்மையினைக் குறைப்பதற்கு அவற்றினை நவீனமயமாக்கல் என்பன உள்ளடங்கலாக சீர்திருத்தப் பாதையில் உறுதியாக பயணிப்பதினைத் தேவைப்படுத்துகின்றது.

“பன்னாட்டு நாணய நிதியக் குழுவானது அதிமேதகு சனாதிபதியும் நிதி அமைச்சருமான அநுர குமார திசாநாயக்க, தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான கௌரவ பேராசிரியர் அனில் ஜயந்த பெர்ணாந்து, பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் கௌரவ நிஷாந்த ஜயவீர, இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் பி. நந்தலால் வீரசிங்க, திறைசேரியின் செயலாளர் முனைவர் ஹர்ஷன சூரியப்பெரும, சனாதிபதியின் மூத்த பொருளாதார ஆலோசகர் திரு. துமிந்த ஹுலங்கமுவ, டிஜிட்டல் பொருளாதாரம் தொடர்பான சனாதிபதியின் தலைமை ஆலோசகர் முனைவர் ஹான்ஸ் விஜயசூரிய, தென் மாகாண ஆளுநர் பேராசிரியர் சுசிரிபால மானவடு மற்றும் ஏனைய மூத்த அரசாங்க மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளுடன் சந்திப்புகளை மேற்கொண்டது. பன்னாட்டு நாணய நிதியக் குழுவானது பாராளுமன்ற உறுப்பினர்கள், தனியார் துறையினதும் சிவில் சமூக அமைப்புக்களினதும் பிரதிநிதிகள் மற்றும் அபிவிருத்தி பங்காளர்களினையும் சந்தித்தது.

“தென் மாகாணத்தில் காலிக்கான எமது விஜயம் உள்ளடங்கலாக இப்பணிக்குழு விஜயத்தின் போது வழங்கப்பட்ட உன்னதமான ஒத்துழைப்பிற்காக அதிகாரிகளுக்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இந்நிச்சயமற்ற காலப்பகுதியில் இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எமது அர்ப்பணிப்பினை நாம் மீண்டும் உறுதிப்படுத்துகின்றோம்.”